முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கழறிற்றறிவார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

27.11.2018, செவ்வாய்க்கிழமை

1. **அருட்சுடரே ஆறுமுக சக்தியே**
**அண்ணலே ஞான வள்ளலே**
**அருள்பட தன் அவதாரமதை**
**அறமாக்கி வளர்க்கும் ஞானியே**
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
இனிமைபட **விளம்பி தேள் திங்கள்**
**இயம்பிட லாப திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 11ம் நாள் 27.11.2018, செவ்வாய்க்கிழமை)**
3. **வாரமதில் கழறிற்றறிவார் நாயனாரும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
அறம் வளர்க்கும் ஞானதேசிகன்
அறம் வழி தொடரும் மக்கள்
4. மக்களெல்லாம் உண்மைபட நேர்மைபட
மகான் சேவையில் கலங்கம் நேரா
ஆக்கமுடன் தொண்டுகள் செய்து
ஆசா பாசம் வழி பொருள் பற்று கொள்ளா
5. பற்று கொள்ளா தன்னார்வமுடன்
பணிவுபட சேவை ஆற்றிட
உற்றதொரு சகதொண்டர்களும்
உயர் மக்கள் குருவருள் பெற்ற
6. பெற்ற ஞானவான்கள் என
போற்றி மதிப்பு தந்து நடந்திட
மாற்றம் தரும் அரங்க ஞானி
மாட்சிமை மிக்க சூட்சும பார்வை
7. பார்வையில்தான் உள்ளோமென
பண்புடன் அரங்கன் தொண்டர்கள்
நேர்மைபட சேவை ஆற்றி வர
நிலவுலகில் ஆறுமுகனார் சக்தி
8. சக்தி கிட்டி உலகியல் துன்பம்
சாராத பாதுகாப்பு பலமும்
பக்தியுடன் ஞானசித்தியும் கூடி
பாருலகில் அழியாமை எனும் உயர்கதி
9. உயர்கதிநிலை அரங்கன் சீடர்கள்
உயர்வுபட அடைந்து சிறப்பர்
தயவு இல்லாத தொண்டுகள்
தரணியிலே சிறப்பு அடைவதில்லை

10. சிறப்பு பெற வேண்டும் ஆயின்
சித்தி பெற வேண்டும் ஆயின்
மறுப்பு கொள்ளா உலக மக்கள்
மண்ணுலகில் தயவுமிக்க அரங்க ஞானி

11. ஞானியரின் சேவை ஏற்றுமே
ஞானமுடன் தானதருமங்களை
கனிவுடன் செய்து வருகவே
கடைநாளும் பாதுகாப்பு கடைத்தேற்றமும் பெறுவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் கழறிற்றறிவார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அற்புத சக்தி நிறைந்த அருட்பெருஞ்ஜோதி சுடரே முருகப்பெருமானின் சக்தி வடிவமே அண்ணலே ஞானவள்ளலே எல்லையில்லா அருள்பலம் கொண்டுமே அறம் செய்வதையே அவதாரமாக ஆக்கி அறம்தனை வளர்க்கின்ற முருகப்பெருமானின் அவதார மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 11ம் நாள் 27.11.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே கழறிற்றறிவார் நாயனார் யானும் ஒளி சூட்சும நூல்தனையே உரைக்கின்றேன் என்கிறார் மகான் கழறிற்றறிவார் நாயனார்.

உலகினில் தர்மத்தினை வளர்த்து அறம் காக்கும் மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தர்மத்தின் வழிதனை மக்களெல்லாம் ஏற்று தவறாது பின்பற்றி வருவதுடன் உண்மையுடனும் நேர்மையுடனும் மகான் ஆறுமுக அரங்கனின் தானதரும தொண்டுகளில் கலங்கம் ஏதும் நேராமல் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் வருவதுடன், அவரவரின் ஆசாபாசங்களின் வழி சென்று பொருள் பற்று கொள்ளாமல் தன்னார்வத்துடன் பணிவுடன் பயபக்தியுடன் சேவைகளை செய்து வர வேண்டும். தம்முடன் பணி செய்யும் சக தொண்டர்களையும் தம்மைப் போலவே எண்ண வேண்டும். அவர்களும் உயர் மக்களே என்று எண்ண வேண்டும். சக தொண்டர்களும் குருவருளினை பெற்றிட்ட ஞானவான்களே என்று போற்றி மதிப்பளித்து நடந்திட வேண்டும்.

பேராற்றல்மிக்க பெருந்தகை மாட்சிமைமிக்க மகா ஞானி உலக மாற்றத்தையே தந்தருளும் உயர் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மாட்சிமைமிக்க சூட்சும பார்வையில்தான் நாம் இருக்கின்றோம் எப்போதும் அந்தரங்கத்தில் அரங்கன் நம்மை கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றார் எனும் உண்மையை உணர்ந்து பண்புடன் அரங்கனின் தொண்டர்கள் நேர்மையுடன் தொண்டுகளை செய்து வர வேண்டும்.

அவ்விதமே செயல்பட இவ்வுலகினில் முருகப்பெருமானின் சக்தி அவர்களுக்கு கிடைத்து உலகியல் துன்பம் சார்ந்திடாத வகையில் தக்க அருள்பாதுகாப்பும், பலமும் பக்தியுடன் ஞானசக்தியும் பெருகி இவ்வுலகினில் அழியாமை எனும் உயர்வான மேல்நிலையை ஆறுமுக அரங்கனின் சீடர்கள் உயர்வுபட அடைந்து சிறப்படைவார்கள்.

தயவு இல்லாத தொண்டுகள், தயவுடன் செய்யப்படாத தொண்டுகள், இவ்வுலகினில் சிறப்பினை பெறுவதில்லை. அவரவரும் செய்கின்ற தொண்டுகள் சிறப்படைய வேண்டுமாயின், அவரவரும் சித்திபெற வேண்டுமாயின், மறுப்பு ஏதும் இல்லாமல் தயவே வடிவான ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தொண்டுகளை ஏற்று தொண்டுகள் செய்வதுடன் அரங்கன் கூறும் ஞானோபதேச வழிகளிலே நடப்பதுடன் தானதருமங்களை கனிவுடன் செய்து வர வேண்டும். இவ்விதமே செய்து வரவர, அவர்களது ஆயுள் முழுதும் அரங்கனின் அருள் பாதுகாப்பை அவர்கள் பெறுவதுடன் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கழறிற்றறிவார் நாயனார்.

–சுபம்–